# காக்கைபாடினியார் நச்செள்ளையார் பார்வையில் சமூகம்

# Kakaipadiniyar Nachellayar's Parvayil

*முனைவர் இரா. கௌரி*
உதவிப் பேராசிரியர் - தமிழாய்வுத் துறை
ஏ.வி.சி. கல்லூரி (தன்னாட்சி)
மன்னம்பந்தல், மயிலாடுதுறை

**Dr. R. Gowri**
*Assistant Professor*
*Department of Tamil Studies*
*AVC College (Autonomous)*
*Mannambandal, Mayiladuthurai*

*ஆய்வுச் சுருக்கம்*

*மக்கள் வாழும் முறையைக் கொண்டே சிறந்த சமுதாயம்மலர்கிறது. சங்ககால மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் காலக்கண்ணாடியாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. ஒரு படைப்பாளி தான் வாழும் இடச்சூழலையும், அவ்விடம் வாழ்மக்களின்மன உணர்வுகளையும் ஒட்டியே படைப்பை உருவாக்க முடியும். அவ்வகையில் தமிழுக்கு உயிரும் உடம்புமாக விளங்கக் கூடிய சங்கப் பாடல்கள் சமூக இயக்கத்திற்கு மூல ஆதாரமாக விளங்குகின்றன என்றால் மிகையாகாது. காலந் தோறும் படைக்கப்படுகின்ற இலக்கியம்சமூகவியலை அடிப்படையாகக் கொண்டு உருவாகிறது. அவ்விலக்கியம் படைக்கப்படும் வரை படைப்பாளிக்கு சொந்தமாகிறது. படைக்கப்பட்ட பிறகு படிப்பவருக்கு சொந்தமாகிறது. அதாவது, சமுதாயத்திற்கு சொந்தமாகிறது." என க.ப.அறவாணன் குறிப்பிட்டுள்ளார். சங்கப் புலவர்கள்தாங்கள் படைத்துள்ள கருத்துக்களை மரபுவழி சந்ததி, பின் சந்ததி ஆகியோர் பின்பற்ற வேண்டும் எனவும், சமுதாயத்தை நன்னெறிப்படுத்த வேண்டும் எனவும் எண்ணினர். இவ்வாறாக அவர்கள் அமைத்த பாடல்கள்சமுதாயத் திற்கு விழிப்புணர்வூட்டும் வகையில் அமைந்துள்ளன. சங்க பெண்பால்*

## Abstract

*A good society thrives on the way people live. Sangam literature is a mirror of the times to highlight the life of the Sangam people. A creator can create works according to the environment and the feelings of the people living there. It is no exaggeration to say that Sangh songs, which can be interpreted as life and body, are a source of social movement. "Literature" which is created from time to time is formed with sociology as its base. As long as the work is created, it belongs to the creator. After creation it belongs to the reader. That is, it belongs to the community as Aravanan has mentioned. They thought that the traditional ideas created by Sangam scholars should be followed by generations after generations and this community should be justified. Thus the songs composed by them are meant to raise awareness of the community. The purpose of*

*புலவரான காக்கைப்பாடினியாரும் சமூக அக்கறை உணர்வுடன் பாடியுள்ள பாடல் கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

***முக்கியச் சொற்கள்:***

*சங்க இலக்கியங்கள், பெண்பால் புலவர்கள், காக்கைபாடினியார், நச்செள்ளையார், சமூக அக்கறை*

*this article is to explore the song ideas sung by the Sangha female poet Kakaipadiniyar with a sense of social concern.*

***Keywords:***

*Sangha Literatures, Female Poets, Crow Singers, Nachellaiyars, and Social Concerns*

**Citation**

Gowri, R. "Kakaipadiniyar Nachellayar's Parvayil.'" *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 1, 2022, pp. 49–56.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20136118*

**சங்கப் பெண்பால் புலவர்களின் ஆளுமைத்திறம்**

*சங்ககாலம் முதல் இக்காலம் வரை பெண்களின் நிலையினை வரிசைப்படுத்தி பார்க்கும்பொழுதே இடைக்காலம் இருண்ட காலமாகவே இருந்துள்ளது. சங்ககால பெண்கள், பெண்பால் புலவர்கள், முழு சுதந்திரம் உடையவர்களாகவும், சமுதாய மேம்பாட்டில் அக்கறை உணர்வு உடையவர்களாகவும் விளங்கினர். மேலும் சங்க மகளிர் கல்வி, பொருள் தேடல், அரசியல், வீரம், சமுதாயப்பணி ஆகிய அனைத்து துறைகளிலும் மேம்பாடு உடையவர்களாகவே விளங்கி உள்ளனர் என்பதை,*

***கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும்***
***மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்***
***விருந்துபுறந்தருதலும் சுற்றமுஓம்பலும்***
***பிறவு மன்னகிழவோள் மாண்புகள்[2]***

*என வரும் தொல்காப்பியர் கூற்றால் அறிய முடிகிறது. மேலும், சமயக் கருத்துக்களை வலியுறுத்தியுள்ள இடைக்கால இலக்கியங்களைக் காட்டிலும், சங்ககால இலக்கியங்கள் பெண்கள் பண்பாட்டில் சிறந்தவர்கள் என்பதை விளங்கினார்கள் என்பதைச் சுட்டுகின்றன. மேலும் அவர்கள் கடமை உணர்ச்சி உடையவர்களாகவும், விருந்தோம்பலில் மேம்பட்டவர்களாகவும் விளங்கினர் என்பதோடு, குழந்தை வளர்ப்பில் தனி கவனம் கொண்டவர்களாகவும் விளங்கியமையையும் எடுத்துரைக்கின்றது. மேலும், சமுதாய மேம்பாட்டில் தான் பெற்ற பிள்ளைகளுக்கும் ஓர் இடம் உண்டு என்பதில் உறுதிப்பாடு உள்ளவர்களாக விளங்கியுள்ளனர். அவர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைகளுக்கு பாலூட்டும் போதே நல்லறிவையும், நற்பண்புகளையும் ஊட்டி வளர்த்தனர். இங்கு எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்ல வராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் அடிகள் நினைவுக் கூறத்தக்கதாக அமைகிறது. அவ்வகையில் சங்ககால சமுதாயத்தை எடுத்துரைக்கும் வகையில் பின்வரும் பாடல் வரிகள் அமைந்துள்ளன.*

***ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே[3]***
***இன்றும் செருப்பறைக் கேட்டு விருப்புற்று மயங்கி***
***வேல்கைக்கொடுத்து வெளிது விரித்துஉடீஇ***
***பாருமயின் குடுமி எண்ணெய்நீவி***
***ஒருமகன் அல்லது இல்லோள்***
***செருமுகம் நோக்கி செல்க என விடுமே[4]***
***அடல்வேல் ஆடவர்கன்றியும் அவ்வில்***
***மடவரல் மகளிர்க்கு மறம்மிகுந் தன்று[5]***

*இப்பாடல்வரிகளை நோக்கும் போது சங்க மகளிர் சமுதாய வளர்ச்சிக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்ட மனப்போக்கை உணர முடிகிறது. மேலும், பெண்கள் தாங்கள் போர்க்களம் செல்ல முடியாத நிலையில், தாங்கள் பெற்ற ஆண் மகனை போருக்கு அனுப்பினர். இச்செயல் அவர்கள் போர் மீது கொண்ட பெருவிருப்பத்தினை உணர்த்துவதோடு அவர்தம் அறிவு நுணுக்கமும், நுண்மான்நுழை புலமும் நம்மை வியக்கச் செய்கிறது. அவர்கள் தான், தன் வீடு என குறுகிய உள்ளம் இல்லாதவர்களாய் சமுதயாத்திற்கு உதவக்கூடிய வகையில் உயர்வுள்ளம் கொண்டவர்களாய் விளங்கினார்கள் என்பதற்கு, புறநானூற்று காவற்பெண்டு*

*எனும் பெண்பால் புலவரின் கூற்று சான்றாக அமைகிறது. அதாவது, நின்மகன் எங்கே எனக் கேட்ட பெண் ஒருத்தியிடம் வீரத்தாய் ஒருத்தி "புலிவாழ்ந்த குகை போல ஈன்ற வயிறு இங்கு உள்ளது. குகையிலிருந்து புறப்பட்ட புலிப்போல என் மகனும் போர்க்களத்தில் தோன்றுவான்" என மகனின் வீரத்தை நிலை நிறுத்தும் வகையில் நிறை சால்பினளாய் விடை கூறும் பாங்கு அமைகிறது.*

*மேற்கண்ட கூற்றுகளை நோக்கும் போது சங்ககாலப் பெண்களின் ஆளுமைத் திறன் விளங்குகின்றது. மேலும், சங்ககாலப் பெண் படைப்பாளர்களாகிய ஔவையார், ஒக்கூர்மாச ாத்தியார், காக்கை பாடினியார் நச்செள்ளையார், நப்பசலையார், பொன்முடியார் போன்றோர் குறிப்பிட்டுச் சொல்லும் படியாக வாழ்ந்துள்ளனர். அவர் தம் படைபாளுமைத் திறம் போற்றுதலுக்கு உரியது.*

**காக்கை பாடினியார் நச்செள்ளையார்**

*இவர் கடைச் சங்ககாலத்து பெண்பால் புலவர்களுள் ஒருவர். சங்க பாடல்களுள் இவர் பாடிய பாடல்கள் 12 ஆகும். அப்பாடல்கள் அனைத்தும் எட்டுத்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. அவையாவன, குறுந்தொகை1 (பாடல் 210), புறநானூறு 1 (பாடல் 278), பதிற்றுப்பத்து 10 (ஆறாம்பத்து முழுவதும்), நச்செள்ளையார் என்பதே இவரது இயற்பெயராகும். இப்பெயருடைய பல புலவர்கள் அக்காலத்தில் வாழ்ந்துள்ளனர். எனவே, காக்கையைச் சிறப்பித்து பாடிய இவரை காக்கைப் பாடினி நச்செள்ளையார் என மக்கள் அழைத்தனர். இவர் காக்கைக்கு உணவிடும் பழக்கத்தை குறுந்தொகை பாடலில் குறிப்பிட்டுள்ளார்.*

***திண்தேர் நள்ளிகானத்த அண்டர்***
***பல் ஆபயந்த நெய்யின் தொண்டி***
***முழுதுடன் விளைந்த வெண்ணெல் - வெஞ்சோறு***
***எழுகலத்து ஏந்தினும் சிறிது - என் தோழி***
***பெருந்தோள் நெகிழ்ந்த செல்லற்கு***
***விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே***[6]

*என்ற இப்பாடல் தான், இப்பெண்பால் புலவரை சமுதாயத்திற்கு அடையாளமிட்டு காட்டுகிறது. அதோடு சங்க கால மக்களின் வாழ்வியலையும், நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது. தோழிக் கூற்றாக அமைந்த இப்பாடல் முல்லை நில வருணனைகளை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. தலைவன் ஒருவன் தலைவியை விட்டு பிரிந்து பொருள் தேடச் சென்றான். அது சமயம் தலைவி வருத்த முற்று காணப்பட்டாள். அவளைத் தோழி பலவற்றை எடுத்துக் கூறி ஆற்றுவித்தாள். ஒருநாள் காலை பொழுதில் காகம் கரைந்தது. அன்று மாலையே தலைவன் வந்து விடுகிறான். இதனை அறிந்த தலைவன் தான் வரும்வரை தலைவியை ஆற்றுவிந்து திருந்த தோழியைப் பாராட்டுகின்றான். அதற்கு தோழி தலைவனைப் பார்த்து நீ ஆற்றுவித்தவரை பாராட்ட வேண்டும் என எண்ணினாயானாள், காக்கையைப் பாராட்டுக என கூறிச்சென்றாள். விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே என்ற பாடல் வரி விருந்தினர் வரப்போவதை உணர்த்திய காக்கைக்கு பலிச்சோறு இடவேண்டும் என்ற தோழியின் உள்ளக்கிடக்கையை உணர்த்துகிறது. அதாவது, காக்கை விருந்து வரப்போவதை அறிவிக்கும் அறிகுறியாக கரையும் என்பது மக்கள் கொண்ட*

*நம்பிக்கை. வருந்திய தலைவிக்கு தலைவன் வந்து விடுவான் என்ற நம்பிக்கையைக் கொடுத்தது காக்கையின் செயல். எனவே, காக்கையைப் பாராட்டு முகமாககாக்கைக்கு பலிசோறு இட வேண்டும் என்பது அறச்சிந்தனையை வலியுறுத்துகிறது.*

*அறச்செயல்களில் தலையாயது விருந்து போற்றலாகும். அதிலும், நாம் உண்ணுவதற்கு முன்பாக பிறர்க்கு உணவளித்தல் சிறப்புடையது. இக்கருத்தை திருமூலர் "நீங்கள் உண்ணும் முன்பாக ஒருகைப் பிடி உணவு காக்கைக்கு இடுங்கள்" என குறிப்பிடுகின்றார். அதாவது, சமுதாயத்தினருக்கு இயலக்கூடிய கொள்கையை பரிந்துரைச் செய்கிறார். நாம் இல்லாதவருக்கு ஒன்றினை உண்ணுவதற்கு முன்பு கொடுப்பதே சிறந்த அறச்செயலாகும் என்பதை,*

***ஆர்க்கும் இடுமின் அவர்இவர் எண்ணன்மின்***
***பார்த்து இருந்து உண்மின்பழம் பொருள் போற்றன்மின்***
***வேக்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்***
***காக்கைகரைந்து உண்ணும்காலம் அறிமின்[7]***

*என குறிப்பிடுகின்றார். இப்பாடல் மேற்கூறிய நச்செள்ளையாரின் கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கதாக அமைகிறது. பொதுவாக நாம் உண்ணும் முன்பு இவருக்குத் தருவதா? அவருக்குத் தருவதா? என சிந்தனைச் செய்யவேண்டாம். அவர், எப்படிப்பட்டவராக இருந்தாலும் அவருக்கு உணவிடலாம். அதே சமயம், கணக்குப் பார்த்து வருமானத்திற்காக உணவிடக்கூடாது எனவும் எச்சரிக்கைச் செய்கிறார். பசி வந்துவிட்டது என்பதற்காக நாமே முழுமையாக உண்டுவிடாமல், பசித்த உயிர்கள் யாராவது வருகிறார்களா என பார்த்த பிறகு உண்ணவேண்டும். காக்கை தன் இனத்தாரை அழைத்து அவைகள் வந்த பிறகே உண்ணும். இச்செயலை நாம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். திருவள்ளுவரும் இல்லாதவருக்கு ஒன்று ஈதலே கொடை, மற்றவை எல்லாம், பதிலுக்கு பிறரிடம் ஒன்றை எதிர்பார்த்து கொடுப்பதாகும் என குறிப்பிடுகின்றார்.*

***வறியவர்க்கு ஒன்று ஈவதேஈகை மற்றெல்லாம்***
***குறி எதிர்ப்பை நீரது உடைத்து[8]***
***மேலும்,***
***வித்தும்விடல் வேண்டும் கொல்லோவிருந்தோம்பி***
***மிச்சல்மிசை வான் புலம்[9]***
***செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்***
***நல்விருந்துவானத்தவர்க்கு[10]***

*என வரும் பகுதிகளில் நம்மை சிந்திக்கச் செய்கிறார்.*

*உலகில் வாழும் உயிரினங்களில் காக்கைக்கு உணவிடுதலையே இலக்கியங்கள் அறிவுறுத்துகின்றன, காரணம், காகம் தனக்கு கிடைத்த உணவினை தான் மட்டும் உண்ணாமல், தன்னைச் சார்ந்தவர்க்கு கொடுத்த பிறகே உண்ண வேண்டும் என்ற உயர்வான கருத்தை மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. இவ்வழக்கும் இன்றளவும் நம்மிடையே இருந்து வருவது சிறப்பு. விரதம் மேற்கொள்பவர்கள் இறைவனுக்கு படையல் செய்த பிறகு அவ்வுணவின் முதல்கையளவு உணவினைக் காக்கைக்கு கொடுத்த பிறகே உண்ணுவர். இச்செயல் தானத்தின் மேன்மை நமக்கு உணர்த்துவதாக அமைகிறது.*

*நாம் ஒருசெயலை மனதில் எண்ணும் போது, அயலவர் சொல்லிச் செல்லும் சொல் நன்மையையோ, தீமையையோ செய்யும் என மக்கள் நம்பினர். இதனை நற்சொல் கேட்டல் என சங்கப்புலவர்கள் பதிவிட்டுள்ளனர். அதேப்போல காக்கைகரை தலையும் விருந்தினர் வருகையை உணர்த்தும் நற்செயல் என நம்பினர். இதற்குபுள் நிமித்தம் என உரை செய்துள்ளனர். காகம் கரைந்து உண்ணும் என குறிக்கும் கருத்தில் உள்ள கரைதல் நன்னிமித்தம் மட்டுமல்லாது இனம் போற்றலாகிய பண்பினையும் உணர்த்துகிறது.*

*பெண்வீரம் போற்றுதல்*

*சங்ககாலப் பெண்கள் வீரம் உடையவர்களாக விளங்கினர். தான் பெற்ற மகனை வீரன் என பிறர் பாராட்டு தலைப் பெருமையாக எண்ணினர். காக்கைப் பாடினி நச்செள்ளையார் பாடிய புறநானூற்று பாடல், ஒரு தாயின் வீர உணர்வை பதிவு செய்கிது. வீரத்தாய் பெற்றெடுத்த ஆண்மகன் ஒருவன் போர்க்களம் சென்றான். களம் புகுந்த அவன் பகைவரின் படையை எதிர்த்து போர் புரிய முடியாமல் நிலைகுலைந்து புறமுதுகிட்டு ஓடி இறந்து பட்டான் என பலர் கூறினர். அச்சொற்களை நம்பாத அத்தாய் வீரசபதம் செய்தவாறு போர்க்களம் சென்றாள். அங்கு வீரமரணம் அடைந்த வீரர்களின் உடல்களையெல்லாம் புரட்டிப் புரட்டிப்பார்த்தாள். சிதறிக் கிடந்த உடற்கூறுகளை ஒன்றாக்கி பார்த்து தன் மகன் விழுப்புண் பெற்றுதான் இறந்தான் என்பதை அறிந்த அவள் தன் மகனை பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியை விட அதிக மனமகிழ்வு கொண்டாள் என்பதை,*

***நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்***
***முளரி மருங்கின் முதியோள் சிறுவன்***
***..................................................................***
***படுமகன் கிடக்கை காணூஉ***
***ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே'[1]***

*என வரும் புறப்பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன. இரு அரசர்கள் நேருக்கு நேராக போர் புரியும் தும்பைத் திணைப்பாடலில் விழுப்புண்பட்டு இறந்த மகனின் உடலைக் கண்டு மகிழ்ந்து கண்ணீர் வடிப்பது உவகைக் கலூழ்ச்சி எனும் துறையாகும். இச்செயல், சங்ககாலம் வீரச் சமுதாயமாக விளங்கியமையை விரித்துரைப்பதாக அமைகிறது. தமிழ்ப் பெண்களின் வீரத்தை எடுத்துரைக்கும் இப்பாடற் கருத்து*

***ஈன்ற பொழுதினும் பெரிது உவக்கும் தன்மகனை***
***சான்றோன் எனக் கேட்ட தாய்'[2]***

*என்ற குறளோடு ஒப்பு நோக்கத்தக்கதாக அமைகிறது. சிதைந்து கிடந்த பல உடல்களில் தன் மகன் உடலை அடையாளம் கண்ட அத்தாயின் கூர்மையுணர்வும், தாயுள்ளமும் சிறப்புடையதாகிறது.*

**சமூக ஆளுமை வெளிப்பாடு**

*காக்கைப்பாடினி நச்செள்ளையார் பதிற்றுப்பத்தில் பாடியுள்ள பத்துபாடல்களும் சேரமன்னன் ஆடு கோட்பாட்டு சேரலாதனின் வீர, கொடையுள்ளத்தை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது. நாட்டை ஆளக்கூடிய மன்னன் மக்களை நல்வழியல் நெறிப்படுத்த வேண்டும், பகைவரிடமிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை செல்வ, பகைவர் பணிந்துதிறைதந்தால் சினம் தணிக! மலையிலும் கடலிலும் பெற்ற வளங்களைப் பகிர்ந்து கொண்டு தட்டுப்பாடின்றி அறம் செய்யும் நாட்டைக் காப்பாற்ற*

*வேண்டியது நின் கடன்'' ஞாயிறு தோன்றுவது போல நீ இரவல் பெருமக்களின் சிறுகுடியை வளம் பெற செய்ய வேண்டும், குழந்தையைக் காப்பது போல குடிமக்களை பாதுகாக்க வேண்டும் என மன்னனுக்கு அறிவுரைக்கூறும் பாங்கு அப்புலவரின் சமூக ஆளுமையை எடுத்துரைக்கிறது. மேலும், ஆற்றுப்படுத்துதல் சமுதாய மக்களின் எதார்த்த போக்கையும், பிறர் நலமே தன் நலம் என எண்ணும் பொது நல உள்ளுணர்வையும் வெளிப்படுத்துவதாக அமைகிறது. மேலும், ''துணங்கையாடும் மகளிரோடு சேரனும் சேர்ந்து துணங்கை கூத்து ஆடினான். இச்செயலைக் கண்ட அரசி அவனிடமிருந்து விலக்கி ஊடல் கொண்டாள் என புலவர் குறிப்பிடுகின்றார். இச்செயல் தன் கணவன் தனக்கு மட்டுமே என எண்ணும் பெண்ணுள்ளத்தை எடுத்துரைக்கிறது.*

***சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து***
***முழா இமிழ்துணங்கைக் குத்தழு உப்புனையாக***
***சிலைப்புவல் ஏற்றின் தலைக்கைத்து'[13]***

*மேலும், இந்நூலில் சேரமன்னர்களின் மரபு வழி அரசாட்சியைக் கூறும் விதமாக உன் முன்னோர்களால் வெல்லப் பட்டவர்கள் கோட்டைக்கு வந்து திரை செலுத்துகின்றனர்'' எனக் கூறியது தந்த மகன் அவன் மகன் என வழி வழி அரசாட்சி சிறப்பை எடுத்துரைக்கிறது.*

*விறலியர், பாண்மகள், துணங்கையர் போன்ற பெண்கலைப் பிரிவினர் சமுதாயத்தில் மதிக்கத்தக்க வகையில் போற்றப் பட்டனர் என்பதை தம்பாடலில் புலவர் பதிவு செய்துள்ளார். மேலும் சேரலா தன் அன்பு அருள் ஆகிய நற்பண்புகள் உடையவனாக நல்லாட்சி நிகழ்த்தினான். பார்ப்பணர்க்கு குட்ட நாட்டிலிருந்து ஒரு ஊரையும், கபிலைப் பசுக்களையும் தானமாக வழங்கினான். வானவரம் பன் என்னும் பெயர் தனக்கு விளங்கும்படி செய்தான் என மன்னனின் சிறப்புகளையெல்லாம் பாடலில் குறிப்பிட்டு சங்ககால சமுதாயத்தை நம் கண் முன்கொண்டு வந்து நிறுத்துகிறார் .*

**முடிவாக**

*காக்கையைப் பற்றி பாடியதால் இப்புலவர் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என அழைக்கப்பட்டார். இப்புலவர் பாடிய பாடல்களில் அறச்சிந்தனையை வலியுறுத்தும் பாங்கு, மன்னர்க்கு நாடாளும் தன்மையை எடுத்துரைக்கும் புலமை, சங்க கால மரபுவழி அரசாட்சியை அறிவுறுத்தும் விதம், தன்னலம் பாராமல் பிறர்நலம் போற்றும் கலைப்பிரிவினர் தம் உள்ளுணர்வு, தாயுள்ளத்துடன் இரக்க உணர்வு மேலிட வாழ்ந்த வீர மன்னர்களின் நாடாளும் தன்மை, போன்ற கருத்துக்கள் நிறைந்து காணப்படுகின்றன. இவ்வாறு எடுத்துரைக்கும் புலவரின் புலமை நலம் சிறப்புடையது. காக்கைக்கு பலி சோறு இடவேண்டும் எனக்கூறும் விதமாக புலவர், தம் பாடலில் விருந்து போற்றல், நன்றியறிதல், நற்சொல் கேட்டல், நன்னிமித்தம், இனத்தாரைப் போற்றுதல், நம்பிக்கை போன்ற சிந்தனைகளை வெளிக்கொணர்வது போற்றுதலுக்கு உரியது. பதிற்றுப் பத்துபாடல்களில் இடம்பெற்றுள்ள விறலியர், கோடியர், பாண்மகள், இப்பெண்களின் ஆடல் பாடல் சிறப்புகளை கூறுவதன் மூலம் சங்ககால சமுதாயத்தில் பெண்கலைஞர்களுக்கு இருந்த நன்மதிப்பை அறிய முடிகிறது. அறவழியில் அரசாண்டு மக்களை நன்னெறிப் படுத்துவது மன்னனின் கடமை எனவும், குளிர்க்காலத்தில் ஞாயிறு தோன்றுவது போல மக்களுக்கு துன்பம் ஏற்படும் சமயங்களில்*

*காப்பாற்றுவதும் மன்னரின் தலையாய கடமை எனவும் அறிவுறுத்தும் பாங்கபெண்பால் புலவர்க்கு இருந்த கருத்து சுதந்திரத்தை உணர்த்துகிறது.*

**பயன்பட்ட நூல்கள்**


1. *க.ப. அறவாணன் - தமிழ் இலக்கியசமூகவியல்ப.14*
2. *தொல்காப்பியம் பொருளதிகாரம்நூ.152.*
3. *புறநானூறு பா.எண்.312*
4. *புறப்பொருள் வெண்பாமாலை - நூ.49*
5. *புறநானூறு - பா.எண்.2/9*
6. *குறுந்தொகை - பா.எண்.210*
7. *திருமூலர் - திருமந்திரம்பா.250*
8. *திருக்குறள் - குறள்எண்.221*
9. *திருக்குறள் - குறள்எண்.65*
10. *திருக்குறள் - குறள்எண்.6.*
11. *புறநானூறு - பா.எண்.2/6*
12. *திருக்குறள் - குறள்எண்.69*
13. *பதிற்றுப்பத்து - பா.எண்.52*


## References


1. *Aravanan, A.D., Tamil Literature and Society, 14.*
2. *Tolkappiyamadhatikaram, No. 152.*
3. *Purananurupa, No.312.*
4. *Purabhaya Venpamalai, No. 49.*
5. *Purananuru, P. No. 2/9.*
6. *Kurunthogai, Pa.No.210.*
7. *Thirumoolar, Thirumandrampa, 250.*
8. *Thirukkural, Kural No.221.*
9. *Thirukkural, Kural No.65.*
10. *Thirukkural, Kural No. 6.*
11. *Purananuru, P. No. 26.*
12. *Thirukkural, Kural No.69.*
13. *Pathirpattu, Pa.No.52.*